# உணவு நெருக்கடி

மக்களுக்கு வேண்டிய உணவுப் பொருட்களில் காணப்படுகின்ற பற்றாக்குறையோடு மக்கள் உண்ணுகின்ற உணவில் போதிய ஊட்டச்சத்து இன்மையும் உணவு நெருக்கடியாகவே கருதப்படுகின்றது. உலகின் மக்கள் தொகை அதிகரிப்பு வேகத்தை விட (1.7 விழுக்காடு) உணவு உற்பத்திப் பெருக்கம் (1.8 விழுக்காடு) அதிகமாகக் காணப்படுகின்ற போதும் உலகின் பல நாடுகள் உணவு நெருக்கடியினையும் பட்டினிச் சாவினையும் எதிர் நோக்கி வருவதனை அவதானிக்கலாம். குறிப்பாக ஆபிரிக்க,ஆசிய நாடுகள் உணவு நெருக்கடியினை எதிர்நோக்கி வருகின்றன.

உலக உணவு நெருக்கடிக்கான காரணங்களுள்

★ அதிகரித்த சனத்தொகைப் பெருக்கம்
★ விளை நிலப் பற்றாக்குறை
★ விளை நிலங்கள் முழுமையாகப் பயன்படுத்தாமை
★ உணவுப் பொருட்கள் வீண்விரயமாக்கப்படுகின்றமை
★ உணவு ஒதுக்கம்.

போன்ற காரணங்கள் குறிப்பிடத்தக்கன.

உலகின் சனத்தொகைப் பெருக்கமானது மிக வேகமாக அதிகரித்துச் செல்கின்றது. தற்போது 7.2 பில்லியனாக காணப்படுகின்ற மக்கள் தொகை 2100 ஆம் ஆண்டில் 11.2 பில்லியனாக அதிகரிக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இத்தகைய மக்கள் தொகைப் பெருக்கமானது வளர்ந்த நாடுகளை விட வளர்முக நாடுகளிலேயே மிகவும் அதிகமாகக் காணப்படுகின்றது.

மக்கள்தொகைப் பெருக்கமானது மிக விரைவாக அதிகரித்துச் செல்வதனால் விளை நிலங்களில் பெரும்பாலானவை வதிவிடங்களாக மாற்றியமைக்கப் படுவதனால் உணவுப் பயிர்களை விளைவிப்பதற்கான விளை நிலங்களைப் பெற்றுக்கொள்வதில் நெருக்கடி ஏற்படுகின்றது. விளைநிலங்கள் முழுமையாகப் பயன்படுத்தப்படாமையும் உணவு நெருக்கடிக்கு முதன்மைக் கரணியமாகும். ஆசிய ஆபிரிக்க நாடுகள் பலவற்றில் போர்களும் உள்நாட்டு நெருக்கடிகளும் காணப்படுவதனால் விளைநிலங்களில் பெரும்பாலானவை பாதுகாப்பு வலையங்களாகவும், மிதிவெடிகள், பொறிவெடிகள் புதைக்கப்பட்ட பகுதிகளாகவும் காணப்படுவதனால் விளைநிலங்களை முற்றாகப் பயன்படுத்த முடியாத நிலை காணப்படுகின்றது.

உலகின் பல நாடுகளில் (சோமாலியா, சூடான்) உணவுப் பட்டினியால் மக்கள் இறக்கின்ற நிலை காணப்படுகின்ற அதே வேளை வேறு சில நாடுகள் உணவுப் பொருட்களை வீண் விரயம் செய்கின்றன. குறிப்பாக ஐக்கிய அமெரிக்கா உலக சந்தையில் கோதுமையின் நிலையான விலையைப் பேணுவதற்காக ஆண்டுதோறும் பெருமளவு கோதுமையை கடலில் கொட்டி அழித்து வருகின்றது.

உலகில் உள்ள எல்லா மக்களும் எல்லா வகையான உணவுகளையும் உண்பதில்லை. இதில் மதங்களும் கலாசார காரணிகளும் செல்வாக்குச் செலுத்துகின்றது. குறிப்பாக இந்து மதம் புலால் உணவுகள் உண்பதனையும் இசுலாமிய மதம் பன்றி இறைச்சி உண்பதையும் தடுக்கின்றது. இவ்வாறு மக்கள் சில உணவுகளை ஒதுக்குவதனால் உணவு நெருக்கடி ஏற்படுகின்றது.

உலக உணவு நெருக்கடிக்குத் தீர்வு காண்பதில் ஒன்றிணைந்த செயற்பாடு அவசியமாகும் அத்தகைய செயற்பாடுகளில்

★ மக்கள் தொகைப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்துதல்.
★ விளை நிலங்களை முழுமையாகப் பயன்படுத்துதல்.
★ உணவு உற்பத்திகளில் இருந்து உச்சப் பயன்பாட்டைப் பெற்றுக்கொள்ளுதல்.
★ உணவுப் பொருட்களை சிக்கனமாகப் பயன்படுத்துதல்.
★ பதிலீட்டு உணவுப் பொருட்களைப் பயன்படுத்துதல்.
★ உணவு ஒதுக்கத்தில் இருந்து மக்களை விடுபடச் செய்தல்.

போன்றன குறிப்பிடத்தக்கனவாகும்.

வளர்முக நாடுகளின் வேகமான குடிசனப் பெருக்கத்தை இயன்றவரை கட்டுப்படுத்துவதனால் விளை நிலங்கள் வதிவிடமாக மாற்றப்படுவதனைத் தடுத்து விளைநிலப் பரப்பை அதிகரிக்க முடியும். மேலும் நிலைத்து நிற்கக் கூடிய வரையிலான புதிய உற்பத்தி முறைகளைக் பின்பற்றுவதன் மூலம் குறைந்த காலத்தில் அதிக விளைவைப் பெற்றுக்கொள்ள முடியும். இது மட்டு மன்றிம் உணவுப் பொருட்களை வீண்விரயம் செய்யாது சிக்கனமாகப் பயன்படுத்துவதனூனூடாகவும் பதிலீட்டு உணவுப் பொருட்களின் பயன்பாட்டை ஊக்குவித்தலூடாகவும் உணவு நெருக்கடிக்குத் தீர்வு காண முடியும்.